திரு. எஸ். ஆர். இராதா : ஆளுநர் அவர்கள் நியமனம் பற்றிச் சொல்ல வில்லை. ஆளுநர் அவர்களைக் கொண்டு கேட்கலாம் என்று சொல்லவில்லை. அந்தச் சிந்தனைக்கு நான் வரவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : அந்தச் சிந்தனைகள் வரும். தொடர்ந்து விவாதம் என்று வரும்போது, அதைத் தொடர்ந்து அந்தச் சிந்தனைகள் உருவாகி விடக்கூடும்.

திரு. எஸ். ஆர். இராதா : பொறுப்பானவர்கள் இந்த நிலையிலே இன்றைக்கு உறுப்பினர்களாக இங்கே உட்கார்ந்திருக்கின்றனர். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அது. அரசியல் ரீதியாக அவர்கள் ஒரு கட்சியின் சார்பில் இன்றைக்கு உட்கார்ந்து கொண்டிருக் கிறார்கள். அவர்கள் அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் ஆணித்தரமாக வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வாதாடுவதுதான் சரியான நிலையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்த தனி உறுப்பினர் தீர்மான நாள் அன்று திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் தொடர்ந்து பேசு வார்கள்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 9—3—1981 அன்று காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

Nil.

### B. Reports, Notifications and Other Papers.

* 52. The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 23 of 1981), as passed by the Assembly.

* 53. The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 24 of 1981), as passed by the Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 6th March 1981.

* 54. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 25 of 1981), as passed by the Assembly.

* 55. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 26 of 1981), as passed by the Assembly.

* 56. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 (L.A. Bill No. 27 of 1981), as passed by the Assembly.

* 57. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 28 of 1981), as passed by the Assembly.

## இணைப்பு 1.

[320 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திரு. பி. டி. அரசு என்ற பி.டி. ஆசிரியர் 20—6—1968 முதல் தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அவரைப் பள்ளிச் செயலாளர் 10—1—1981-ல் பள்ளிக் குழுவின் தீர்மானத்தின்படி, 'மொத்தத் தீய நடத்தைக்காக' Gross misconduct 11—1—1981 முற்பகல் முதல் தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளார்.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973, விதி 22 ன் கீழ் விசாரணையின் நிமித்தம், ஆசிரியர் அல்லது ஆசிரியரல்லாத தனியார் பள்ளி பணியாளர் ஒருவரை இரண்டு மாத காலத்திற்' மிகாமல் தற்காலிக பணிநீக்கம் செய்யும் அதிகாரம் பள்ளிக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை குறித்த காலத்தில் முடியவில்லை என்றால் உரிய அதிகாரியிடம் மேலும் இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு பெறலாம். அந்த ஆசிரியர்க்கு உரிய பணிக்கால ஊதியம் மற்றும் பிழைப்பு ஊதியத்தையும் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி நிர்வாகம் தற்காலிக பணிநீக்கம் செய்த செயலை எதிர்த்து 29—1—1981 பிற்பகல் 3 மணி அளவில் சென்னை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் தி. நகர் மேல்நிலைப் பள்ளி அருகில் கிளர்ச்சி செய்து ஊர்வலமும் நடத்தினர். அதில் வன்முறை சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. மற்றும் அந்த நிகழ்ச்சிகளில் பெற்றோர்களோ மாணவர்களோ ஈடுபடவோ அல்லது பாதிக்கப்படவோ இல்லை. பள்ளி உள்ள பிராந்தியத்தில் பதட்ட நிலை எதும் இல்லை.

* Circulated to all M.L.Cs. on 6th March 1981.